**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 190 /2015**
**U/s. 463,464(b),467,468,471,420 IPC**
**PROSECUTION WITNESS NO. 1(LW. 1)**

| | |
|---|---|
| **Name** : ராஜசேகர் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

**1, 2** எதிரிகள் ஆஜர்**. (3-5** எதிரிகள் **CC 33/2026** ல் பிடிகட்டளையில் உள்ளனர்**)**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

## <u>C.C.No.190 /2015 12.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.35 FN

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் நாஞ்சிகோட்டையில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் தஞ்சை பிலோமினாள் நகரில் குடியிருந்தேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் சம்பவ சமயத்தில் அவதார் ஜீவல்லர்ஸ் நகை கடையில் விற்பனையாளராக வேலை செய்தேன். தேதி , மாதம் ஞாபகமில்லை. கடந்த 2010 ம் வருடம் காலை ஆஜர் எதிரிகள் இருவரும் நான் வேலை செய்யும் கடைக்கு வந்து அவர்கள் வீட்டின் திருமண நிகழ்விற்காக நகை வாங்குவதாக சொன்னார்கள். அவர்கள் நகை எடுத்தார்கள். எத்தனை பவுன் என்று தற்போது ஞாபகமில்லை. அவர்கள் எடுத்த நகைக்கு நாங்கள் பணம் கேட்டோம். அதற்கு அவர்கள் பணம் இல்லை. கார்டு தான் உள்ளது என்று சொன்னார்கள். அவர்கள் கையில் பல கார்டுகள் வைத்திருந்தார்கள். ஒவ்வொரு கார்டையும் போட்டு பார்த்தேன். ICICI வங்கியின் கார்டை தேய்த்து பார்த்தபோது அதில் பணம் வந்தது. பின்பு நாங்கள் அவர்கள் வாங்கிய நகையை கொடுத்தோம். அடுத்தநாள் சென்று நாங்கள் ICICI வங்கிக்கு சென்று பார்த்தபோது எதிரிகளின் வங்கி கணக்கிலிருந்து நான் வேலை செய்யும்கடையின் வங்கி கணக்கிற்கு பணம் வரவில்லை என தெரியவந்தது. வங்கியில் என்னை சிறிது நேரம் காத்திருக்கசொன்னார்கள். அப்போதும், பணம் வரவில்லை. 2 நாட்கள் காத்திருந்தோம். அதன்பிறகும் பணம் வரவில்லை என்பதால் நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். ஆனால் அப்போது நான் கையெழுத்து செய்யவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**1.** ஆய்வாளர் விசாரணையில் நான் எனது கடையில் நகை வாங்கியதற்கான ரசீது ஏதேனும் கொடுத்தேனா என்றால் எனக்கு தற்போது

ஞாபகமில்லை. ஆய்வாளரிடம் எனது கடையில் Payment succesful என வந்த ரசீதை ஒப்படைத்தேனா என்றால் ஞாபகமில்லை. ஆஜர் எதிரிகளை தற்போது தான் எனக்கு ஞாபகம் வந்தது. நான் வங்கிக்கு சென்றதாக முன்விசாரணையில் கூறியது அனைத்தும் பொய் என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் வங்கிக்கு எனக்கு பதிலாக வேறொருவர் சென்ற விவரத்தை கூறவில்லை என்றால் சரிதான். 1 வது எதிரியின் ஓட்டுநர் உரிமமத்தை கொடுத்த விவரத்தை நான் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் ஞாபகமில்லை. நான் வேலை செய்த நகை கடையில் அந்த கடையின் முத்திரை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்து 2 நாள் கழித்து 3 வது நாள் பணம் வரவில்லை என்பதால் தான், நான் காவல்நிலையத்தில புகார் கொடுத்தேன். நான் அது குறித்து போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை.

2. நகை கடையில் வேலை பார்க்க ஊழியர்களுக்கு அடையாள அட்டை உண்டு என்றால் அந்த சமயத்தில் இல்லை. என்னென்ன நகைகள் எதிரி வாங்கி சென்றார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்ன நாள், தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும், யாரோ ஒருவரால் கொடுக்கப்பட்ட பொய் புகாரிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளை போலீசார் தற்போது அடையாளம் காட்டியதால் நான் அடையாளம் கண்டுகொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் நான் வேலை செய்த கடையில் எந்த நகையும் வாங்கவில்லை என்றாலும், அவ்வாறு வாங்கியிருந்தால் அதற்கான நகை ரசீது எதிரிகளின் அடையாள அட்டை , ஏடிஎம் கார்டு ரசீது ஆகியவற்றை போலீசாரிடம் நான் புகார் கொடுத்தபோது ஒப்படைத்திருப்பேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம் - கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 190 /2015**
**U/s. 463,464(b),467,468,471,420 IPC**
**PROSECUTION WITNESS NO. 2 (LW. 4)**

| | |
|---|---|
| **Name** : கருணாகரன். | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

**1, 2** எதிரிகள் ஆஜர்**. (3-5** எதிரிகள் **CC 33/2026** ல் பிடிகட்டளையில் உள்ளனர்**)**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி,வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.190 /2015 12.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.55 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் EB காலனியில் குடியிருந்துவருகிறேன். சம்பவ சமயததில் தஞ்சை ஒரத்தநாட்டில் குடியிருந்தேன். நான் தஞ்சாவூர் அவதார்ஜீவல்லர்ஸ் நகை கடையில் விற்பனையாளராக பணிபுரிந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 20.8.2010 ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் கொடிமரத்து மூலை என்ற இடத்தில் போலீசார் இருந்தார்கள். என்னுடன் சரவணன் என்பவரும் கையொப்பம் செய்தார். தற்போது அவர் உயிருடன் இல்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள ஒப்புதல் வாக்குமூலம் , கைப்பற்றுதல் மகசரிலுள்ள (2) 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அசாஆ2 அசாஆ3, அசாஆ4 , அசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நகை வாங்கிகொண்டு பணத்திற்கு பதிலாக கார்டு கொடுத்தாகவும், அந்தகார்டில் பணம் இல்லை என வந்தது. முதலில் அந்த கார்டை தேய்த்தபோது பணம் பெறப்பட்டதாக குறுஞ்செய்தி வந்தது. மாலையில் வங்கி கணக்கை சோதித்து பார்த்தபோது பணம் வரவில்லை. அப்போது நான் கடையில் தான் இருந்தேன். போலீசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**1.** போலீசார் என்னை காவல்நிலையத்தில் வைத்து தான் விசாரித்தார்கள். அப்போது என்னிடம் 4-5 தாளில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். எனது கடையின் உரிமையாளர் சொன்னதன் அடிப்படையில் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த தாளில் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. நான் அதில் எழுதிஇருந்தவற்றை படித்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் கையெழுத்து செய்தபோது மாலை சுமார் 5.00 மணி இருக்கும். கொடிமரத்து மூலை பகுதி மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றாலும், கடைகள் அதிகம்

உள்ளன என்றால் சரிதான். கடையின் உரிமையாளர் சொன்னதன் பேரில் தான் நான் இரண்டு இடங்களுக்கும் சென்று கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் எழுதிய தாளில் தாள் தான் கையெழுத்து செய்தேன். ஆஜர் எதிரிகளை நான் காவல்நிலையத்தில் தான் பார்த்தேன் என்றால் சரியல்ல. கொடி மரத்து மூலை என்ற இடத்தில் மாலை 4.00 மணியளவில் பார்த்தேன். சம்பவ நடந்து மறுநாள் புகார் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை.

2. சம்பவ நடந்தன்றே புகார் கொடுத்தோம். வங்கி கணக்கை பார்த்தபோது பணம் வரவில்லை என்பது குறித்து போலீசார் விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சொன்னேன். நான் Amount not settlement என்ற அடங்கிய ரசீதை நான் தான் போலீசிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் போலீசாரிடம் அவ்வாறு கூறவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரை நான் தான் எழுதி கொடுத்தேன். மேற்படி விவரத்தை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். ஆஜர் எதிரிகள் வாங்கிய சென்ற நகையின் ரசீது எங்கள் கடையில் தான் உள்ளது என்றாலும், அதனை நான் போலீசார் விசாரித்தபோது கொடுத்தேனா என்றால் கொடுத்தேன்.

3. நான் எந்த ஆவணங்களை யும் போலீசார் விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் , தற்போது ஆவணங்கள் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.சொன்ன நாள், நேரம், இடத்தில் எதிரிகள் என் முன்னிலையில் எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் அவர்களிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. எனது கடையின் உரிமையாளர் கேட்டுகொண்டதன் பேரிலும், தற்போது போலீசார் சொல்லிகொடுத்தற்கு ஏற்றவாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கொடி மரத்து மூலையில் நான் சென்ற போது கூட்டமாக இருந்தது என்றாலும் அப்போது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். பொதுமக்கள் எவரிடதிலும் கையெழுத்து கேட்கவில்லை என்றாலும், என்னிடம் தான் கையெழுத்து கேட்டார்கள் என்றால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம் - கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.